வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்அவர்களின் செயல்முறைகள்
**ந.க.எண். 4312/ஆ4/2022, நாள் 06.05.2023**

– – –

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 – அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) அனைத்துப் பள்ளிகளும் – ஆன்–லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வது தொடர்பான அறிவுரைகள்– தொடர்பாக.

**பார்வை :**
1) அரசாணை (நிலை) எண். 14, நாள். 29.01.2018.
2) சென்னை–6, அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.02370/எச்.1/2023, நாள் 06.05.2023

-----

நடைபெற்ற மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுக்கான தேர்வு முடிவுகள் வருகிற 08.05.2023 அன்று காலை 09.30 மணிக்கு வெளியிடப்படவுள்ளது. பார்வை 1–ன்படி அனைத்து வருவாய் மாவட்டங்கள் வாரியாக மேல்நிலைப் பள்ளிகளுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று அனைத்துப் பள்ளிகளும் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User-id, Password–ஐ கொண்டு ஆன்–லைன் வழியாகவே பதிவிறக்கம் செய்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

எனவே, வருகிற 08.05.2023 அன்று காலை 9.45 மணிக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்–லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க அனைத்துப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், முன்னேற்பாடுகள் செய்யப்பட்ட விவரத்தை உறுதி செய்துகொண்டு சார்ந்து மாவட்டக்கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார்) அவர்களுக்கு தெரிவிக்கும்படி சார்ந்த தலைமையாசிரியர்/ மெட்ரிக்பள்ளிகள் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலர்(இடைநிலை /தனியார் ) அனைத்துப் பள்ளிகளிலும் முன்னேற்பாடுகள் சரிவர செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொண்டு அவ்விவரத்தினை இவ்வலுவலக மின்அஞ்சலுக்கு உடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**
**அனைத்துவகை மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும்**
**மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர்கள்**
**நகல்**

வேலூர். **மாவட்டக்கல்வி அலுவலர்கள்**(இடைநிலை /தனியார் ) தொடர் நடவடிக்கையின் பொருட்டு